**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, HOSUR**

**SESSIONS CASE NO. 76/2022**

**PROSECUTION WITNESS 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Ramesh | Caste | : | |
| Father's Name | : | Pappanna | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.04.2023

## (A1 to A4 Present. )

**முதல் விசாரணை:**

நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். நான் கடந்த 10.08.2015 அன்று மாலை சுமார் 4 மணியளவில் நான் கம்பெனிக்கு சென்று கொண்டிருந்தேன்.

அப்போது சூளகிரியில் பஸ் ஸ்டாண்டிற்கு எதிரில் மேம்பாலத்திற்கு அருகில் கூட்டமாக இருந்தார்கள், போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். போலீசார் மேப் போல் ஏதோ வரைந்து கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு ஒரு வெள்ளை பேப்பரில் எழுதிக் கொண்டார்கள். அதை நான் படித்துப் பார்த்தேன். அதில் 09ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் 3 பேர் யாரோ பைக்கில் வந்து தலையில் அடித்து பணப்பையை அறுத்துக் கொண்டு சென்றது

தொடர்பாக விசாரிப்பதாக எழுதப்பட்டிருந்தது. அதில் கையொப்பம் போடும்படி என்னிடம் கேட்டார்கள், நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் - **அ.த.சா.ஆ.2.** அதில் என்னுடன் கிரிமூர்த்தி என்பவரும் கையொப்பம் போட்டார். போலீசார் என்னை விசாரித்து விட்டு அனுப்பி விட்டார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சூளகிரி பேருந்து நிறுத்தம் எதிரில் மேம்பாலத்திற்கு அருகே போலீசார் கும்பலாக நின்று விசாரித்து கொண்டிருந்ததாக கூறுகிறேன் எதற்காக அவர்கள் விசாரித்து கொண்டிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் முதலில் தெரியாது பிறகு அங்கு சென்று பார்த்த போது தெரிந்து கொண்டேன்.

அங்கு போலீசார் மேப் போட்டதாக கூறுகிறேன் எதற்காக அவர்கள் அதை போட்டார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

என்ன போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் திருடு சம்பவம் நடந்த இடம் சம்பந்தமாக படம் போட்டார்கள்.

ஒரு வெள்ளை பேப்பரில் போலீசார் எழுதி கொண்டதாக கூறுகிறேன் அதில் என்ன எழுதிகொண்டார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் அன்றைய தேதி, நேரம், இடம், என்னுடைய பெயர் மற்றும் என்னுடைய முகவரி, என்னுடன் வந்த கிரிமூர்த்தி அவருடைய பெயர் ஆகியவை எழுதி கொண்டார்கள்.

இதை தவிர வேறு எதுவும் எழுதிகொள்ளவில்லையா என்றால் இதற்கு கீழே அந்த இடத்தில் சுற்றி நான்கு பக்கமும் என்ன உள்ளது என்பதை பற்றி எழுதி கொண்டார்கள்.

அந்த இடத்தில் வீடுகள் மரங்கள் இருப்பதை மட்டும் எழுதி கொண்டார்களா என்றால் எழுதி இருப்பார்கள், எழுதிய போது அதை படித்து பார்த்தேன் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

படம் வரைந்ததில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் அதில் போடவில்லை, எழுதி கொண்டதில் தான் கையொப்பம் போட்டேன்.

நான் கையொப்பம் போட்டத்தாளில் வேறு யார் கையொப்பம் போட்டிருந்தார்கள் ஏ்ன்றால் நான் தான் முதலில் கையொப்பம் போட்டேன்.

எனக்கு பிறகு யார் கையொப்பம் போட்டார்கள் என்றால் கிரிமூர்த்தி போட்டார், நான் வலது புறம் போட்டேன், அவர் இடது புறம் போட்டார்.

எங்கள் இருவரை தவிர வேறு யாரும் கையொப்பம் போடவில்லையா என்றால் இல்லை.

நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் நான் சம்பவ இடத்தில் கையொப்பம் போடவில்லை என்றாலும் நான் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் போட்டேன் என்றாலும் காவல் நிலையத்தில் கையொப்பம் போட்டுவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

E SASIKALA

PRINCIPAL SUBORDINATE JUDGE
Digitally signed by E SASIKALA
Location: HOSUR
Date: 2023.04.12 20:20:50 +0530